முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.07.2022, புதன்கிழமை

1. வான தேவர்கள் அனைவரும்
வாழ்த்தி உந்தன் தருமத்தை
ஞானமாக மாபெரும் தானமாக
ஞாலமதில் காத்து வருகவே
2. வருகவே அரங்க மகானின்
வல்லமை மிக்க அவதாரம் மெச்சி
பெருமைபட சுபகிருது மிதுன திங்கள்
புந்திவாரம் இருபானீர் திகதி தன்னில்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 22 நாள், 06.07.2022 புதன்கிழமை)
3. தன்னிலே அருளாசி தன்னை
தவராஜன் கேட்க கணநாதரும்
மண்ணுலகம் சிறக்க உரைப்பேன்
மாதருமம் எங்கும் பெருகவே
4. பெருகவே தரும வேலியதும்
பேருலகம் எங்கும் பாதுகாப்பாகி
ஆறுமுகன் வழிபாட்டை அதிகமாக்கி
ஆபத்தில்லா உலகம் ஆக மாற்றும்
5. மாற்றம் தரும் அரங்கன் உபதேசம்
மறையாக மக்களிடை பரவி
ஆற்றல் தனை கூட்டுவதுடன்
அழியாமை எனும் மகா சக்தி தந்தருளும்
6. அருளவே சன்மார்க்கம் எனும்
அற்புத நெறிதனை ஏற்று
மிரளா முழுமை சரணாகதி
முழுமைபட அரங்கனிடம் கொண்டு
7. கொண்டுமே தொடர இனி
கூறிடுவேன் மக்களிடை பலம்
தொண்டு வழி ஞானமாகி
தொடர் சேவையாகி மாற்றம்
8. மாற்றம் மக்களிடை இனி
மரணம் வெல்லும் பலமாக
ஆற்றல் கூட்டி அருளும்
அற்புதம் படைக்கும் ஞான வான்களை
9. ஞானவான்களை கொண்டு
ஞானிகள் வெளிப்பாடு மிகுந்து
ஞானபண்டிதன் தலைமை ஏற்ற
ஞான ஆட்சியாக மலரும்

10 மலரும் மண்ணும் மக்களும்
மாண்புள்ள சக்திகள் ஆகி
வளரும் ஞான சபையாக
வல்லமை காணும் ஞானபூமி ஆக

11. ஆகவே அரங்கமகா ஞானி
ஆன்மீக ஞானவழிவர மாற்றம்
யுகமாற்றமாகவே நடந்தேறும்
உரைத்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–